**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 114/2025

அன்புசெல்வம் த/பெ.சுப்பையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.M.பாலஜி , உதவியாளர், நிலை–III என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்புசெல்வம் | தொழில் | |
| த/பெ. | சுப்பையா | வயது | 40 / 2026 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

நாள் : 07.03.2026

வா.சா. 1

**<u>முதல் விசாரணை</u>**

நான் தாவா வழக்கில் வாதி / வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன் என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதில்லுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில்லுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். அதில்லுள்ள சங்கதிகள் உண்மைதான். 30.05.2019 தேதிய நான் கிரையம் வாங்கிய ஆவணத்தின் அசல் , வழக்கு எண்.41/2021 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதன் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அறந்தாங்கி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.41/2021 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கின் பிறப்பிக்கப்பட்ட தீப்பாணை நகல் தாக்கல் செய்கிறேன். வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.09.2025 தேதிய வழக்கு சொத்துக்களுக்கான பட்டா எண்.445 படியான கணினி சிட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.09.2025 தேதிய 18.01.2008 முதல் 14.09.2025 காலக்கட்டத்திற்குரிய வில்லங்கச் சான்று கணினி நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் இந்த வழக்கில் தோன்ற தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.**